**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.124 /2024

**20.04.2026**

## D.W.1- தேசிங்கு

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது தகப்பனார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த வழக்கு விவரம் தெரியும். எதிர்வழக்குரை தயார் செய்ய நான் தான் எனது வழக்கறிஞருக்கு விவரம் சொன்னேன். வாதியை தெரியும். 06.07.2021ல் பிரதிவாதிகள் அனைவரும் வாதியிடம் ரூ.2 லட்சம் கடன் பெற்று அதற்கு புரோநோட்டு எழுதிக்கொடுத்ததாக வாதி வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். புரோநோட்டை நாங்கள் எழுதிக்கொள்ளவில்லை. பிராதில் எங்களது முகவரி விவரங்கள் சரிதான். மேற்படி முகவரிக்கு கடித போக்குவரத்து உள்ளது என்றால் சரிதான். 24.05.2024ல் வாதி பிரதிவாதிகளாகிய எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார், அதனை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பினோம் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துக்கள் இல்லை என தெளிவாக மறுத்து கூறவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பு புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்று பார்வையிட நீதிமன்றத்தில் அனுமதிக்கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் எங்களுடைய கையெழுத்து காணப்படுகிறது என்றால் சரியல்ல. மேற்படி புரோநோட்டில் உள்ள என்னுடைய கையொப்பமும், எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பமும் ஒரே மாதிரியான கையொப்பம் என்றால் சரிதான். வே.கள்ளப்பட்டியை சேர்ந்த பாண்டி என்பவரின் மகன் சுரேஷ் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அய்யனார்குளத்தை சேர்ந்த ராஜா மகன் சுரேஷ் என்பவரை தெரியும். அவசர

தேவைக்காக வாதியிடம் ரூ.2 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு உத்தரவாதமாக தாவா புரோநோட்டை எழுதிக்கொடுத்துவிட்டு, தற்போது வாதியை ஏமாற்றுவதற்காக புரோநோட்டில் எங்களது கையெழுத்து இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், வாதிக்கும் கடனாக பண பரிவர்த்தனை நடைபெற்றது என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் ரூ.10 லட்சம் மதிப்புள்ள சொத்தை வாதி பெயருக்கு பதிவு செய்து கொடுத்தாக சொல்லப்படுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக தவறாக வரதட்சனைக்காக ரூ.10 லட்சம் மதிப்புள்ள சொத்தை வாதிக்கு பதிந்து கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கும், எனக்கும் வேறொரு கடன் சம்மந்தமாக மதுரை நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

**Sd/-P.S.Ruskin Raj,**
**Sub Judge,**
**Usilampatti.**